உ

வேலுமயிலுந் துணை.

தமிழ் நாடகாசிரியர்,

ச. சு சங்கரலிங்கக் கவிராயர் அவர்கள் பாடிய

பழனியாண்டிப்பாட்டு

K. A. மதுரை முதலியார் பதிப்பித்ததை பார்த்து வாங்கவும்



போலிப்புத்தகங்களைக் கண்டு ஏமாறாதீர்கள்

ரை முதலியார் அவர்களால்

க்கப்பெற்றது.

1932 [அணா 3

23 JAN 1933

Q26:417
N32
85309

உ

முருகன் துணை.

பழனியாண்டி பாட்டு

OFFICE OF THE REGISTRAR OF ...
23 JAN 1933
MADRAS

வெண்பா

பூமருவு சோலை புகழ்திருநல் லூரோங்கும்
சாமி முருகன் சகோதரா—நேமிமால்
மாமருகா யானைமுகா வாமிமகள் பாலனென்
றேமகற்ற நீயே துணை.

விருத்தம்

முருகா குகாதெய்வ குஞ்சரி மனோகரா
முதுமறைப் புகழ் குருபரா
மும்பழமொடவல் கடலையப்பள மதற்குரிய
மூஷிகற் கிளைய குமரா
ஒருகால் நினைப்பவர்த முடிமீது விளையாடு
முபய பாதப்ர தாபா
உக்கரண வீரசிங் காரவே லாயுதா
ஒயிலுற்ற மயில் வாகனா
கருதாத புல்லர்தன் னிடரால் விளைந்தவென்
கஷ்டமனைத நீக்கி யாளாய்
கலியுகக் காருண்ய ஜீவக்ரு பாகரா
கதிர்காம மலை விலாசா
தருமப் தானச்ச ஞானந்த மூர்த்தியே
சத்ய சம்பன்ன துரையே
தவம்புரி முனீந்திரர் நிதந்துதி பரங்கிரி
தலந்தனி லமர்ந்த தேவே

தங்கரத்தினம்—மெட்டு

செந்தூர் வேலாண்டி ஆண்டி திருச்
செந்தூர் வேலாண்டி

மந்த்ரோப தேசனடி மாது வள்ளி நேசனடி
மங்காதப் பழநி யாண்டி செந்தூர் வேலாண்டி
ஆண்டி திருச் செந்தூர் வேலாண்டி

பாலாபி ஷேகனடி பரம தயாளனடி
பண்டாரப் பழநி யாண்டி செந்தூர் வேலாண்டி
ஆண்டி திருச் செந்தூர் வேலாண்டி

சிவசுப்ர மண்யனடி ஜெகம்புகழ் புண்யனடி
சிங்காரப் பழநியாண்டி செந்தூர் வேலாண்டி
ஆண்டி திருச் செந்தூர் வேலாண்டி

கானமயில் வாகனடி கன்னி வள்ளி மோகனடி
கற்பூரப் பழநியாண்டி செந்தூர் வேலாண்டி
ஆண்டி திருச் செந்தூர் வேலாண்டி

சங்கரலிங் கேசனடி சாது சமர்ஜனடி
சங்கீதம் பழநியாண்டி செந்தூர் வேலாண்டி

660
294·55

வேறு பாட்டு

காமசுந்த ராங்கி என்ற மெட்டு

சோம சுந்த ரேசன் மகனே
தோகைமீதில் நடமிடு
சிவசண்முக குகனே சோ

85309
Q26:417
N32

(சந்தத்தொடர்)

துதிக்குமடி யவர்த்துயர
மகற்றிவர மளிக்குமுருகனே சோ

சொனுமொரு சதுர்மறை முடிவினில்
ஜொலித ப்ரணவ சொரூபப் பரம சோ

துன்பமெனே விட்டகல இத்ததிநி
னன்புமிகத் தாருமையா பன்னிருகைபா சோ

அநுபல்லவி

காமபாசக் கடலைக் கடந்துன்
கமலசரண மதுதுதி செய
சகலசுகமு மனுளு மதுரை சோ

சரணம்

காணுங் கலியுகத்தில் தமிழ்நாடகம்
தோணும்புதுமை என்சொல்லுவேன் சமுகம்
நானுன்னடிமை எனும் சத்தியம் பொய்த்ததோ
நம்புங்கவி முத்துசாமிக்
கின்பந்தரு சங்கரலிங்க சோ

வேறுபாட்டு

திருச்செந்தூர் வேலாண்டி மெட்டு.

பச்சை மயில்மேல் வருவாண்டி திருப்
பழநிமலை யாண்டி ஆண்டி பச்சை

மெச்சுஞ் சேவற் கொடி யாண்டி
மேலாம் பிரணவ முரைப் பாண்டி
விரத வரதகலி யுலகமகிழ் முருகன்
தனன தனனவென நடனமிலகு பச்சை மயில்

தந்தைக் குபதே சித்தாண்டி
தாரமிரண்டு கொண்டாண்டி
தளாங்குதக ததிங்கிணதோம்
தளாங்குதக ததிங்கிணதோம்
தளாங்குதக ததிங்கிணதோம்
என்றுடிய பச்சை மயில்

காவடிக் கருள்தரு வாண்டி
கவி முத்துசாமி சொல்லாண்டி
சந்தங்கமழ் சங்கர லிங்கம் புனை செந்தமிழ்
சந்தம் விளங்குகுக கந்தன் கடம்பன் பச்சை மயில்

வேறுபாட்டு

அடாணு ரூபகம்

தந்தருள் புரிவாயே முருகா
சரணு கதியது தந்

அநுபல்லவி

கந்தாவுமை மைந்தா புகழ்நற்
சடம் பணிந்தாய் திருவடி தெரிசன மது தந்

சரணம்

நாகத்தை முடித்த மதிச்சடைமா
தேவர்க்கு மீனித்த குகப்பெருமா
ளேவெற்பி னிடத்தில் நினைத்திடுமோர்
கீர்த்துதி பெற்ற மலர்க்கழலைத் தங்

செந்திப்பதி மேவிய சுந்தர
சந்தத்தமி ழோதிய மந்திர
சங்கப்பஜ னுமிர்த சங்கர
லிங்கக்குருவாகிய ஷண்முகா தங்

வேறு பாட்டு

சிக்கந்தர் மலைக்குகையில் என்ற மெட்டு

பக்ஷத்தொடு ரக்ஷித்தருள் முருகோனே விரதப்
பச்சைப்புயல் மெச்சிப்புகழ் மருகோனே என்னை ப
பழனுபுரி மலைமேவிய குகனே வுமை
மகனே என்னை பக்ஷ

பரமசிவனுக்கினியப்ரணவ
மதனையருள்சற் குமரப்ரபவ பக்ஷ

பக்தர்துதி யற்புதத்தி ருப்புகழ்க
விக்கருளு முத்தம நீ இத்தினத்தில் பக்ஷ

கஷ்டந்தவிர்த் திடுபதமெத்
னக்குந்தர விதுசமயமே
பக்கந்தனில் வருமடியவ
ருக்குந்துணை தருமனதொடு பக்ஷ

கெ. எ. மதுரை முதலியார் பதிப்பித்த "கோவிலன்" டிராமா
விலை அணு 4.

தொகையறு

மஹா தேவதேவனே சடாக்ஷர
மந்ரோப தேச மெஞ்ஞான மணியே
சுகாதீத கார்த்திகா சுப்ரமண்யகுகா
துலங்கு தேவேந்திரகனியே

பாட்டு

வாலக்குல வஞ்சி சுகா
ஞாலத்தவர் கொஞ்சு முகா
மரகதமயில் விமானரூ
ஷடானனு ஜனார்த்தனு
மங்கள சங்கர லிங்கனி தந்துதி
செந்தமிழ் கொண்டேணே பக்ஷ

வேறுபாட்டு

கழுகுமலைக் குருவிக்குளம் மெட்டு
பழநிமலைப் பஞ்சாமிர்தம் தேனமிர்தம்
பால்காவடி யானந்தம்
பார்க்கவரும் பிரம்மானந்தம்
பக்திதருங் கீதானந்தம்

பரமபா வனகுகன்
விரதகார்த் திகைசுகன்
படமயிலில் நடனமுருகன் பழ

கழுகுமலைச் சுருளிமலை சென்னிமலை
காணவருந் தண்ணிமலை

ஸ்ரீ வடிவுடையம்மன் தாலாட்டு அணா.1. ஒவ்வொருவரும் அவசியம் படிக்கத் தக்கது.

கண்டி கதிர் காமமலை
கொண்டு வளர்சாமி மலை
கடவுளெங் குருபரன்
தணிகையங் கிரியரன்
கனகமயிலில் நடன முருகன் பழ

பண்டாரந் தெண்டாயுதம் ஞானயுதம்
பார்புகழும் வேலாயுதம்
பரமகுரு பாலாமிர்தம்
பாடவரும் தேவாமிர்தம்
படிக்குஞ்சங் கரலிங்கந்
தனக்கும் வந் தருள்செயும்
படனமயிலில் நடன முருகன் பழ

வேறு பாட்டு

பழநிநாதன் என்ற மெட்டு

பல்லவி.

படிக்குந் தியானம் கொடுக்கும் ஞானம்
பார்த் தேன் பதாம் புஜம் ப

சந்தத் தொடர்

பஞ்சா மிர்தங் கொடு வருபவர்
சிந்தா குலந் தவிர் முருகனே ப

பழநிப் பதிபெற் றிடு நற்
குருசற் குண குக முருகனே ப

கே. எ. மதுரை முதலியார் பதிப்பித்த விகடானந்தபோதம் அவசியம் பார்க்கவும்.

பக்திசெயு மற்புதத்தி ருப்புகழை
நித்தமுமெ னக்களிக்குஞ்
சிற்பர கர்த்தனே ப

பகராருண கிரண ஒளியுலவு மயிலில்
வருமபய கரனே ப

சரணம்

பாடப்பாட க்ருபைப் பாலிக்கும் போதன்
பண்டித தண்டாயுத பாணி நாதன்
ஆடுமயின் மீதிலா ரோகணப் பாதன்
ஆனந்த சங்கரலிங்க ப்ரக்யாதன்
அநுதின மடியவர் மனமதி
லிலகிய ரகுபதி மருமக
னெனுமதுரித குக முருகனே
நினைத்து நினைத்து துதித்து துதித்து ப

வேறுபாட்டு

காலங் கலிகால மாச்சுதே என்ற மெட்டு

பாலாபிஷேகம் பார்க்கலாம்
பஞ்சாமிர்தப்
பழநியாண்டி சேவை செய்யலாம்
பண்டாரந் தெண்டபாணி
கொண்டாடும் மந்ரவேணி
பதிபுகழ்ரகு பதிமருமகன் பாலா

எமது ஷண்முகானந்த புத்தகசாலையில் சகலவிதமான புத்தகங்களும் விலை சாசமாகக் கிடைக்கும்.

தேனபிஷேகம் பார்க்கலாம்
வரங்கேழ்க்கலாம்
ஜெனன மரண பிணியைத் தீர்க்கலாம்
சிங்காரப் பழநியாண்டி
சங்கீத சங்கத்தாண்டி
சிவசரவண பவகுருபரன் பாலா

காவடி விநோதங் காணலாம்
தண்டபாணியின்
கார்த்திகை ப்ரசாதம் பூணலாம்
கலிகால தெய்வ மூர்த்தி
மலைவாழுஞ் சைவக் கீர்த்தி
கங்கையுஞ் சங்கர லிங்கமு னம்புகழ் பாலா

வேறுபாட்டு

இந்த வுடலைநம்பி என்ற மெட்டு

கண்ணிகள்

பாலாபிஷேகப் பழனிமலை பந்தப்
பாசப்பிணி தன்னை தீர்க்குமலை பா

வேலாயுதன் தங்கி வாழுமலை ஞான
வேதம் படர்ந்து விளங்குமலை பா

காவடி யேந்தி கொண்டாடுமலை திருக்
கார்த்திகை பாலனுக் கேற்றமலை பா

சாவடி தர்மந் தழைந்தமலை தாசன்
சங்கர லிங்கன் சங்கீதமலை பா

K. A. மதுரை முதலியார் பதிப்பித்த பாதுகா பட்டாபிஷேகம் அவசியம் பார்க்கவும் விலை அணு 6.

ராகம் சங்கராபரணம் ரூபக தாளம்

பல்லவி

சிவ சரவண பவகுமரா
சகல லோக குகப்ரதாப சர

அநுபல்லவி

விரத கார்த்திகைக்கு தாரா
விமல ஞான சமரதீரா
பரதநடன மயிலின் வீரா
பழனி மலையி லிலகு மதுர
பதும ரமண சுமன சுஜன சர

சரணம்

முருகா முருகா திருமகள்
மருகா மருகா யென தெதிர்
வருகா வருகா தெனகுறை
யோது——யிதிலொரு
திருகா திருகா வரமது
தருகா தருகா திருப்பதி
சரியோ சரியோ சமயமுமீது
தேவர்
முதல்வா முதல்வா யிதுவே தகாது
யெந்தன்
முறையோ முறையோ
வுனையும் விடாது
யிந்தவாது செய்வதேது
வுந்தன்
சரணகதியிது வேததி
தருவாயதி பதியேதுதி

கோவிலன் டிராமா விலை அணா 4.

Q26:417
N32

சங்கரலிங்கக் கிருபாகர
சங்கரா பரண ராக சரவண

———

வாவா கார்த்திகா என்றமெட்டு

தாதாஷண்முகா இது
தருணமுனது திரு சரண கமலமலர் தா

சாதனையேது சாமியென்மீது
தணிகைப்பதி வளர் நாதா—தன
தனத்த தன வெனத்தினமு
நிருத்தமிடு திருப்ர சன்னந் தா

சாதனையேது சாமியென்மீது
தணிகைப்பதிவளர் நாதா செழுஞ்
சந்தத் தமிழ் புனை செந்திற்
குருபர மைந்தர்க் குனதர
விந்தத் திருவடி தா

சாதனை யேது சாமி யென்மீது
கவிசரபப் பெயர் சங்கரலிங்கம்
விரதத் தமிழ் தங்குமுன்
கிருபை தா

———

85309

வேறு பாட்டு

க்ஷேத்திரப் பழனி மூர்த்தி தமிழ்
தோத்திரப் பஜனைக்கீர்த்தி

கெ. எ. மதுரை முதலியார் பதிப்பித்த வள்ளித் திருமணம் அவ
சியம் பார்க்கவும்.

பாத்திரம் பாலாபிஷேகம் செழும்
பஞ்சமிர்தப்பிரவாகம்
பக்தர்க்கருள் தரும் சத்தி வேலாயுதன்
நித்தந்திருப்புகழுக் கருள் ஷண்முகன் க்ஷேம

மாமதுரை மகாராணி மகனும் பழனி
தெண்டபாணி
க்ஷேமந்தருந் திருமருகன் துதி
செய்யுமெனக்கருள் முருகன்
செந்தி நகர்ப்பதி கண்டி கதிர் காமம்
நின்று வளர்குகன் குன்றுளிர் சண்முகன் க்ஷேம

சங்கீத சங்கப் பிரசங்கம் சொல்லும்
சங்கரலிங்க ப்ரபந்தம்
தங்கிய காவடி கோடி வரும்
ஷண்முக னாலயந்தேடி
தந்தத்தன தந்தத்தன
வென்றுத் தமிழ் சங்கத்தொளிர் க்ஷேம

வேறு பாட்டு

பக்தி மார்க்கமாம் பஜனை பாடு நல்ல
பரம சாதுக்களைக் கொண்டாடு ஆதி
சத்திசிவன் திருப்பதம் நாடு ஜென்ம
சாபல்ய மாகவழி தேடு பக்தி
நீர்க்குமிழி போலிந்தக் காயம் ஒரு
நிமிஷத்திலே வருமே பாயம் கண்ணால்
பார்க்கும் பொருளனைத்தும் மாயம் நல்ல
பரகதி பெறவிது பாயம் பக்தி

"தூக்குத் தூக்கி" டிராமா பார்க்கவும் விலை அணா 4.

வீணிலென்று மேகொர்வங் கொள்ளாதே மேலோர்
விரித்துரைத்த மொழி தள்ளாதே நாளை
காணுமெமன் முன்னிலு சொல்லாதே எந்தக்
காலத்தும் பொய்மொழி சொல்லாதே பக்தி
சங்கமெங்கும் புகழுந்திடுந் தங்கம் சந்தச்
சாகித்திய கவிராஜ சிங்கம் எங்குந்
தங்கமுத்து சாமிக்கந்த ரங்கம் என்றிச்
சகஞ்துதிக்குஞ் சங்கர லிங்கம் பக்தி

குமாரதெய்வம் மெட்டு

படிக்கப் படிக்கப் பராமுகமேனையா திருப்
பழனியில் வளர் சரவணபவ
முருகனேயுன தொரு புகழதை படி

துடிக்கு மயின்மேல் நடிக்கும் ஷண்முகா
தோத்திரக் கீர்த்தனம் பாடிக்
காத்தருள் க்ஷேத்திர நாடிப் படி

சொலுமென தொரு முறை செவிபுக
விலையா என்
றுயர் கெடவரமருள் செயவொருமலையா
கலியுக் ஜீவதயாளா
கனிமொழிமாது மணாளா
வலிமிகுதமிழணிதோளா
வர கார்த்திகை
விரதோத்தம
எனைகாத்தருள்
கதிர்வேற்கர படி

மனோவசிய சாஸ்திரம் ரூ. 1—8—0.

முருகன்றனை விடவேறிலகதியே என்று
மொழியுஞ் செயலறியாததது சரியோ
தருணந்தனி லெதிர்வந்தொரு
வரமுந்தர சரணம்புரி
சங்கரலிங்கக் கிருபாகர
ஜகதீசனே மகராஜனே படி

—— ——

வள்ளியிடம் வேடன் சொல்வது

சிந்து

கானகத்து வேடுவப் பெண்ணே வந்த
காரணத்தை நானுரைக்க நீதனித்துக் கேள்
மாவனத்தி லேயுதித்தமான்—அம்மான்
மார்பகத்தி லேமுளைத்த கோடிருக்குமான்
தேனெடுத்து மேபுசிக்குமான்—வள்ளி
தேவிஎனப் பேர்தரித்து நேரில் நிற்குமான்
வேலையொத்தக் கூர்விழிப் பெண்மான்—ஏழு
வேடுவர்க்கு ளேதனித்த மோகனக் கண்மான்
மாலையிட்ட தோளிருக்குமான்—அம்மான்
வாய்த்தகுற ஜாதிதனக்கே யுதித்தமான்
பாலையொத்த வாய் மொழிப் பெண்மான்—என்னை
பார்த்துகண்ணைக் காட்டிகவண் போட்டிழுத்தமான்
நாரதனைத் தூதுவிட்டமான்—நம்பி
ராஜனுக்கு மேஜனித்த வாசகப் பெண்மான்
காரணப்ரதான புள்ளிமான்—தினையைக்

K. A. மதுரை முதலியார் பதிப்பித்த திவாகராய கீர்த்தனை
1-2 பாகம் எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

காவலிட்டுக் காரறுத்து ஏரிழுக்குமான்
தாதியர்க்கு ளேதனித்தமான்—முத்து
தானிழைத்த மாலையிட்ட தோளிருக்குமான்
நான் துரத்த வாசலுற்றமான்—அதை
நாடுமெனக் கேகொடுத்து மேல்வழி நிற்பாய்
கானகத்து வேடுவப் பெண்ணே.

விநோதப்பாட்டு

ஆண்டிபண்டாரம் மெட்டு

காணவிநோதம் சாமி காண

சேணுடர் போற்று மிந்த
சென்னை ராஜ தானியிலே
கோணக் கிராப்புகளும்
கோட்டுகளும் பூட்சுகளும் காண

நாமம் விபூதி பூசும்
நாளெல்லாம் பழுத்துப் போச்சு
சீமான்கள் நெற்றியிலே
சிகப்பு சாந்து பொட்டுமாச்சு காண

ஏ. பி. ஸி. டி. மிருக்கலாச்சு
ஏடெழுத்துத் தள்ளலாச்சு
காபி கிளப்பு பெருக்கலாச்சு
காசுக்கொரு கீப்பராச்சு காண

ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளருளிச்செய்த திருவருட்பாத் திரட்டு
எட்டு பாகமும் அணா 8

வீட்டுக் கொரு மோட்டார் கார்
  வீதியிலே திரிந்துகொண்டு
பாட்டையிலே போகும் யேழை
  பரதேசியைக் கொல்ல லாச்சு காண

ரூபாய்க்கு பஞ்ச மாச்சு
  ரூல்சுகளும் பெருக்க லாச்சு
பீப்பாய் பிராந்தி வுஸ்கி
  பீர்கடைகள் அதிகமாச்சு காண

பூலோக ரகசியமெனும்

மதிமோசக் களஞ்சியம்.

இதில் அடங்கிய விஷயங்கள் தெய்வபிரார்த்தனை மோசம், ஜவுளிக்கடை மோசம், அரிசி வியாபார மோசம், மூர்மார்க்கட் சன்னியாசிகள் மோசம், தேவடியாள் மோசம், தட்டுவாணி சிறிக்கிகள் மோசம், மார்வாடி மோசம், சாராயக்கடை மோசம், நட்டிக்காரர் மோசம் திருப்பதிககு போகிறவர் மோசம், உத்தியோகஸ்தர்கள் மோசம், ஜாலம் செய்பவர் மோசம் இவ்வித அனேக மோசங்கள் அடங்கியதோடு வெண்பா விருத்தம் கலித்துறை பதிகங்களோடு ஆங்காங்கு ஐதீக படத்துடன் செந்தமிழ் நடையில் வசன காவியமாக எழுதி முடித்திருக்கிறது. 2-பாகம் சொற்ப காபிகளே இருக்கிறது.

விலை ரூபா 2 0 0

ஷண்முகானந்த புத்தகசாலை,

பார்க் டவுன், மதராஸ்.

ஆசிரிய விருத்தம்.

கார்த்திகேயா நித்யகல் யாணி பாலகா
கந்தா கடம்பகுகா
கரிவரத ராஜேந்த்ர மருக சரவணமுருக
கஜமுக சகோதர மகா
மூர்த்தியா யுலகெலாம் விளையாடு மகிபனே
முத்துக் குமாரவேளே
முத்தமிழ்க் கினியவிச் சித்ரவடி வேலனே
மோகன மயூர துரையே
சீர்த்திதா வென்றுனது பாதமலர் போற்றுமிச்
சேயனெனை யாள வருவாய்
சிங்கார தெய்வகுஞ்சரி வள்ளிபுய மருவு
சிவசுப்ரமண்ய வடிவே
சாத்மீக நற்கீரமுனி தனக்குபகார
சாமியே பூமிபோற்றுந்
தவம்புரி முனீந்திரர் நிதந்துதி பரங்கிரி
தலந்தனி லமர்ந்த தேவே.

வந்தருள் மகானுபாவா என்ற மெட்டு.

பல்லவி.

சுந்தர கணநாதா சுக மிலகிய பாதா
சூரர் புக ழைங்கர சுபகுண நீதா (சுந்)

அநுபல்லவி.

செந்தமிழ் தாராய்—சிறுவர் முன்வாராய்
சீரார் நாடக மேடைக்கு தாரா
மந்த்ர சிங்காரா—மதகெஜவீரா
வாராய் வரந்—தாரா யலங்காரா (சுந்)
சங்கீத வாசா—சகல விலாசா
தாபதர் நேசா—தாரசுகேசா
சங்கரலிங்கன் றமிழ்க்கருளீசா
தாதா வரமது தாசர்க்கிருபேசா (சுந்)

பஹாரியாலா என்ற மெட்டு.

பல்லவி.

தகாது பாவம் தாயே—தாசன்மேல் கோபம் த

அநுபல்லவி.

ஜகானுகூலி நீயென்றுன்னைச் சார்ந்தினம்மா
விகாதமேது யின்னுஞ் சொல்லவேண்டுமோ சும்மா
பழி—வீணுகுமா த
காமபீடமேவு மெங்கள்—காரணி காமாக்ஷியே
நீ மனதிறங்கி சற்று—நின்று காக்ஷியே
தாராய்—நீலாக்ஷியே த
அங்குமிங்கு மெங்குமான ஆரணி புராணி
சங்கரலிங்கன்றமிழ்ச்—சங்கீதராணி
அம்மா—தாக்ஷாயணி த

கழுகுமாமலை முருகா என்ற மெட்டு.

பன்னிருகை வேலவனே
பாலனென் முகம்
பார்த்தருள் தயாபரனே பன்
சின்னஞ் சிறுவனையா—திக்கில்லாப் பாலனையா
உன்னைவிட வேறுரையா உண்டோ துணைதான் மெய்யா
ஓரமேது நல்ல நேரமீது நான்
ஓடிவந்தேன்—தேடியுனை பன்
பாலாபிஷேக நேசா—பழனிமாமலை வாசா
சூலாயுதன் கிருபேசா—துலங்கு சங்கரலிங்கேசா
துன்பந் தீராய்—நல்ல இன்பந்தாராய் பூந்
தேர்கைமயி லேறிவரும் பன்

ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆசிரிய விருத்தமும், காமாட்சியம்மன் ஆசிரிய விருத்தமும் அடங்கிய தோத்திரத்திரட்டு விலை அணா 2. இதை அவசியம் படியுங்கள்.

தேவ ஜகநாதா என்ற மெட்டு.

வேதவாணி புராணி—மலர்
மேவு ஞான பவானி
வேதாகம சதுர்—மாதா விதாரண வே
புஸ்தக ரூபி—பூவுரை தேவி
அஸ்த கடக சிங்காரசு ஜீவி வே
கமலாசனியே கருணாகரியே
இமையார் சரஸ்வதி எமையாதரியே வே
மங்களவேணி மறைதொழும் ராணி
சங்கரலிங்கன் சங்கீதக் கல்யாணி வே

ஸ்ரீராமபாதமு என்ற மெட்டு.

பல்லவி.

ஆனந்த காக்ஷியே அருள்செய் மீனாக்ஷியே
அதிமதுரித மாக்ஷியே ஆ

அநுபல்லவி.

ஞானந்தவாரி நன்மதுராபுரி
நாகரீகயோக சொக்கலிங்கன் மகிழ்பாரி ஆ

சரணம்

ஏனிந்தவாது என்மேலிப்போது
ஏழை நான் பாராய் இதுததி வாராய்
தான விலாசி தாய் மகராசி
சங்கரலிங்கன் றமிழ்க்கிரங்குஞ் சுப்ரகாசி ஆ

செந்தமிழுலகினில் என்ற மெட்டு.

கண்ணிகள்.

ஈசா தேவர்கள் பாவநாசா தில்லைவாழ்நட
ராஜா தாசர்கள் நேசனே—நலமருட்கிரு
பேசா வேத வுபாசனே

எனது வினையகல—மனது மிகமகிழ
நினது கமலமலர் பதமருள் செயும்பர
மேசா பக்தர்கள் வாசனே—படர்ந்த ஜெக
தீசாவுமா மகேசனே. ச
நாதா நளின மலர்ப்பாதா—சகலகலைக்
யாதா வந்தருள்புரிவாய் விளங்கும் பிர
போதா நல்வரந் தருவாய்
நடனமிடுமரிய—கனகசபையிலகு
மினிய கவுரியுமை—மகிழுமழகுடைய
ராதாந்த ஞானசேகரா—சங்கரலிங்கன்
கீதாந்த மோதும் பூதரா ச

ஐயா பழனிமலை வேலா என்ற மெட்டு.

கண்ணிகள்.

வேலா விமலனருள் பாலா—இந்த
வேளை வந்தரு ளனுகூலா
நலாமறை புகழும் சீலா—உன்னை
நம்பினே னளின பொற்றாளா வே
கல்லோ உனதுடைய நெஞ்சம்—உனக்
காகுமோ ஏழைமேல் வஞ்சம்
அல்லோ உனக்கடிமை தஞ்சம்—எனக்
கார்துணை சொல்லுவார் கொஞ்சம் வே
கண்டால் போதுமுந்தன் காக்ஷி—வரும்
கந்தா வுலகில் வெகுமாக்ஷி
உண்டோ பக்தருக்கொருதாக்ஷி—இதற்
கோர் முனியே நல்ல சாக்ஷி வே
தேசம்புகழ் பழனிவாசா—துயர்
தீர்ப்பதுன் முறைபவநாசா
தாசன் சங்கரலிங்க நேசா—இது
சமயம் வருக முருகேசா வே

நாரதர் வள்ளியிடஞ் சொல்லுதல்

தன்னபியாராரம்மா என்ற மெட்டு.

பல்லவி.

சாமி முருகன் துணை
பூமி தனக்கே நிணை சா

அநுபல்லவி.

ஆழிதனையே தெரிந்து ஆறுமுகனை மணர்ந்து
க்ஷேமம் பெறு வாயுகந்து
தினமுமெனது மனதிலுகந்த சா
தேடித் தினை மாவைத் தெள்ளி
தின்றுவன மீது துள்ளி
வாடியலை யாது வள்ளி
வடிவேல் முருகன் மடியேறுவாய் வள்ளி சா
தங்கமயிலேறுங் குகன்
தையலுனக்கேற்ற சுகன்
சங்கையில்லா சண்முகன்
சங்கரலிங்கன் தமிழுணிவைபோகன் சா

இராகம்-கமாஸ்-ரூபகம்.

பல்லவி.

குமாரதெய்வமிதே பெரியது—வேறு
சமானமாகுமா குவலயமதில் கு

அநுபல்லவி.

உமாபதியும் வுள்ளே மகிழ
ஓரே பொருள்சொல் குணாதிசய கு

கெ. எ. மதுரை முதலியார் பதிப்பித்த கிளிக்கண்ணி அவசியம் படியுங்கள்.

சரணம்.

பூ முதல் வேதனு மாமகவானும்—குரு
மாமுனியாகிய ஓர் தமிழோனும்—பொய்
யே மொழியா முதலோரும்
வேல் முருகா முருகா எனவோதும்
போதகுகன் சரவணபவ
நாதனெனுங் குரு நமதொரு கு

அங்கிங்கென முன் கண்டவர்கூடி—பே
ரன்புந்திட நம்புந்துதி பாடி—வர
மடையுங் கடவுளா மிதுவே
நடைதங் துலவியு பொதுவே
அலையா தினி நீ மனமே
நிலைசேர் வழிபார் முனமே கு

புடைச் செழிப்புத் தாம்பிரபரணி—கல்
லிடைக் குறிச்சிப் பூம்பதி தனில்—உய
ருடைப் புகழ்ச்சிக் கோபுர
வடைக் கலத்தைத் தேடிய
உடுமலை முத்துச் சாமியை
அடிமைகொள் சித்துக் காரண கு

விளக்கிடு மீனுக்ஷி சந்நிதியிலே என்ற மெட்டு.

பரங்கிரி முருகன் பா தர்ரவிந்தமே—ஞானப்ரசங்க
பக்தர்க் கென்நாளுஞ் சொந்தமே
பரப்ரம்ம ஜோதியே பாடும் பிரக்யாதியே
பார்க்கப் பார்க்கத்தோணும் பிரீதியே—எவர்க்கும்
வரந்தருஞ் சேவடி வந்தாடுங் காவடி
வாழ்த்தும் புலவோர்க்கும் நலமாகுமோர் தொடி
மாவளஞ் சேர்நிலம்
மகிமைதண்ட பாணியாந்திருப் பர

கண்டோர்க் கதிசயம் காணுஞ் சிவமயம்
கதிர்வடிவேலுக்கே ஜெயம் எந்நாளும்
பண்டான யோகமே பாலாபிஷேகமே
பார்க்கும் புவியோர்க்கும் நிதி சேர்க்கும் தியாகமே
பரவசந் தருநிஜம்
படிக்குஞ்சங்கர லிங்கபூஜிதம் பர

கொந்தாரும் பூங்கணையால் என்ற மெட்டு.

சிங்காரவேல் முருகாதெய்வ மால்மருகா
சிறுவனெனது வினையை விலக்குந்
தினமுந்தணிகை மலையிலிருக்குஞ் சிங்

மங்காத மாமயில் வாகா
வள்ளி கல்யாண ஷண்முகா
பங்கே ருகச் சரவண
பவசிவகுரு பரகுகமணியே சிங்

தொகையரு

கார்த்திகா விரத சம்பன்ன சௌபாக்ய
கலியுக மஹானுபாவா
மூர்த்தியா மூஷிகற்கிளையலா வண்யஸ்ரீ
முத்துக் குமார தேவா.

பாட்டு

பஞ்சாமிர்தப் பிர்ம்மா னந்தா
பாலாபி ஷேகனே கந்தா
தஞ்சம்நின் சரணந் தந்தாள்
சங்கர லிங்கசங் கீதசங்கப்பிரபந்தா சிங்

மனோரஞ்சினி பிரஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

N32
35309

அயக்காந்த திராவகம்.

இரும்பைப்பார்க்கிலும் கடினமான லோகம் வேறொன்றுமில்லை. தாது விர்த்திக்கு இது சிறந்தது பொன்; வெள்ளிமுதலியவைகள் அந்தச் சமயமட்டும் அதிக குணத்தைக்கொடுத்து சீக்கிரத்தில் தேகத்தைக் கெடுத்துவிடும். இதனால் (இருப்பவன் இரும்பைத் தின்றால் போபவன் பொன்னைத் தின்பான்) என்பதுபோல இத் திராவகத்தை சாப்பிடுவதற்குமுன் தன் தேகம் எவ்வளவு நிறையுள்ளதென்று நிறுத்துக்கொண்டு ஷை திராவகத்தை ஒருமண்டலம் 48-நாள் சாப்பிட்டு மறுபடியும் திராசில் நிறுத்துப்பார்த்தால் முன்னிருந்ததைவிட ஒரு வீசை 40 பலம் அதிக நிறையிருப்பது அநுபவத்தில் விளங்கும்

தாதுவிர்த்தியில்லாதவர் இரும்பைப் பழுக்கக் காய்ச்சி அதை ஜலத்தில்வைத்து தினந்தோறும் குடித்துவந்தால் தாதுவிர்த்தி யுண்டாகுமென்று வைத்தியசாஸ்திரம் கூறுகின்றன. இதற்கே இக்குணம் இருக்கும்போது அயத்தினுடையவும் சத்தைத் திராவகமாக இறக்கி யிருக்கும் இதை உட்கொண்டவர்கள் தேகம் வச்சிரமாகுமென அறியவும். இதனால் தீரும் குணங்களாவன:--நரைத்தமயிரைக் கறுப்பாக்கும். உதிர்ந்தமயிரை முளைப்பிக்கும். எரிச்சலைப்போக்கும். சூட்டையகற்றி வாயுவைக் கண்டிக்கும். நல்ல பலத்தைக்கொடுக்கும் இன்னும் உடம்பிலுள்ள எல்லா வியாதியையும் கண்டிப்பதில் ஆக்ஷேபணையில்லை.

24-நாள் மருந்து ரூ. 1-4-0. 48-நாள் மருந்து ரூ. 2-0-0.

ஸ்ரீ கல்யாணி அண்டு. கோ, பாரக்டவுன், மதராஸ்.

ஒவ்வொரு குடும்பத்திலும் இன்றியமையாத

ஆயுள்வேத சிகிச்சாரத்தினமென்னும்

குடும்ப வைத்தியம்

உலகிற் பிறந்த மக்கள் ஒவ்வொருவரும் நோயற்றவர்களாய்ச் சுகசரீரத்துடன் வாழவேண்டுமென்னும் எண்ணத்துடனேயே நம் முன்னோர்கள் திருவாய் மலர்ந்தருளிய வைத்திய சாஸ்திரங்கள் அனந்தமாகும். அவற்றை யெல்லாம் ஒருவன் தன்வாழ்நாளில் வாசித்துணர்வதெனின் இயலாததன்றோ? ஆகவே, அக்குறையை அகற்றுவான்வேண்டி பல வைத்திய சாஸ்திரங்களை நன்கு ஆராய்ந்தெடுத்துத் தொகுத்து வெளிவந்துள்ள இக் "குடும்ப வைத்தியம்" என்னும் புதிய நூலை வாசித்துணர்வோர் தங்கள் சரீரத்தைப் பாதுகாத்துக்கொள்வதோடு, பிறர்க்கும் பயன்படத்தக்க சிகிச்சைகளைச் செய்யலாம். இதுபோன்ற வைத்திய நூல் இதுவரை வெளிவந்ததில்லை. இப்பொழுதுதான் புதிதாக வெளிவந்திருக்கிறது. இந்நூல் ஒன்று ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்குமானால், தக்க சமயத்தில் வைத்தியனைப்போல் உதவி புரியத்தக்கதாகும். மேலும், இதிலுள்ள வாசகங்கள் மிகத்தெளிவாகவும், விரிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூ. 1—8—0

மன்மத ஸ்தம்பன குளிகை

நேயர்களே! பலர் பல பெயரிட்டு விளம்பரப் படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்க மாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனகுளிகை அப்பேர்ப்பட்டதல்ல. கோழியைப்போல் அதிசீக்கிரத்தில் ஸ்கலிதமாகும் புருஷர்கள் இந்தக் குளிகையில் ஒன்றை மாலை 6-மணிக்குச் சாப்பிட்டு இரவு பால் வெற்றிலை யருந்திமுயன்று பார்ப்பாராகில் பெருத்தசுகாநந்தம் உண்டாகும். அனுபவித்துப் பார்பவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்தமாத்திரை டைரக்ஷனில சொல்லி யிருப்பதுபோல் 10-நாள் சாப்பிட்டுவந்தால் ஆண்சிங்கத்தை போன்ற பலமும், ரோஜா புஷ்பம் போன்ற முகதேஜசும், அழகும் தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக் கெட்டிப் படுத்துவதில் இதற்கு நிகர்வேறு எதுவுமில்லை உத்தரவாதம் செய்கிறோம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூபா 2 0 0

உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

ஷண்முகானந்த புத்தகசாலை,

பார்க் டவுன், மதராஸ்.

ரஞ்சினி பிரஸ், சென்னை.